**Date**: 10.02.2021

**DVA** 505/2019

ம.சா. 1 வெண்ணிலா

சாட்சி ஆஜர், சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

நான் காவல் நிலையத்தில் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் எதிர்மனுதாரர்கள் என்னை கெட்ட வார்த்தைகளால் திட்வார் என்றும் , மற்ற எதிர்மனுதாரர்களின் பேச்சைக் கேட்டுக்கெண்டு என்னை திட்டுவார் என்றும், மற்ற எதிர்மனுதாரர்கள் கோர்ட், கேஸ் என்று அலைய விட்டவள் என்றும் கூறி 1 ம் எதிர்மனுதாரரை தூண்டுவிடுவார்கள் என்பது பற்றியும் புகார் அளீத்தேனா என்றால் கொடுத்துள்ளேன் ன் . எந்த தேதி எந்த காவல்நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் ஆகஸ் 2005 ல் சாய்பாபா காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். அந்த புகாரின் நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். புகார் நகலை தாக்கல் செய்யாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் அக்கா கணவரின் பெயர் என்ன என்றால் பழனிச்சாமி. என் அக்கா கணவருடன் எனக்கு தவறான பழக்கம் உள்ளதால் தான் நான் பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் . 10.02.2016 அன்று 1 ம் எதிர்மனு தாரர் எல்.சி.டி டி வி வாங்கி வீட்டில் வைத்திருந்தார் என்றால் இல்லை. நான் தான் வாங்கி வைத்தேன். அந்த டிவியை நான் உடைத்து விட்டேன் என்றால் இல்லை . 1 ம் எதிர்மனுதாரர் வீட்டில் வாங்கி வைத்திருந்த விலை உயர்ந்த பொருட்களையெல்லாம் நான் தூக்கி போட்டு உடைத்துவிட்டேன் என்றால் இல்லை . நான் 1 ம் எதிர்மனுதாரிரன் வீட்டில்

இருந்து கொண்டு வீட்டைப் பூட்டை வைத்து அவரை வீட்டிற்குள் விடாமல் இருந்தேன் என்றால் சரியல்ல . அவர் தான் அவ்வாறு செய்தார் . எனது முந்தைய குறுக்கு விசாரணையில் வீட்டின் பூட்டை என் மகன் தான் உடைத்தார் என்று நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்தசமயத்தில் நான் என் மகனுடன் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். 1 ம் எதிர்மனுதாரர் என் கழுத்தை நெரித்து கொடுமை செய்ததாக நான் கூறியது பற்றி காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் இல்லை . நான் தான் 1 ம் எதிர்மனுதாரரை விரட்டி அவரின் வீட்டில் இருந்து கொண்டு 1 ம் எதிர்மனுதாரரின் தாயாரின் முகத்தில் காரி உமிழ்ந்தேன் என்றால் சரியல்ல. என் வீடும் 1 ம் எதிர்மனு தாரரின் வீடும் எதிரெதிர் வீடு என்றால் சரியல்ல . எதிரில் இருப்பது என் சகோதரர் வீடு. அந்த இடம் என் அப்பாவிற்கு பாத்தியப்பட்டது என்றாலும் , அவர் தான் என் தம்பிகளுக்கு வீடு கட்டுவதற்கு இடம் கொடுத்தார் என்றால் சரிதான் . என் தகப்பனாரும், 1 ம் எதிர்மனுதாரரின் தகப்பனா ரும்விவசாய க்கல்லூரியி ல்வேலை பார்த்தவர்கள் என்றால் ஆமாம் . அந்த பழக்கத்தில் தான் எனக்கும் 1 ம் எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடந்தது என்றால் ஆமாம்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.